இந்திய உயர் ஸ்தானிகராலயம்

கொழும்பு

************

**ஊடக அறிக்கை**

இலங்கை இந்திய சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கொழும்பில் நடைபெற்றது

இலங்கை இந்திய சங்கம் (SLIS) தனது வருடாந்த பொதுக்கூட்டத்தினை கடந்த செப்டெம்பர் 30, 2019 அன்று கொழும்பில் நடத்தியது. சங்கத்தின் போசகர், இந்திய உயர்ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் சுதந்திரமடைந்த பின்னர் 1949 இல் இலங்கை இந்திய சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. அத்துடன் இந்த சங்கம் இலங்கையில் உள்ள மிகவும் பழமையானதும் பாரியதுமான நட்புறவு சங்கமாகும்.

இங்கு பிரதான உரை நிகழ்த்தியிருந்த உயர்ஸ்தானிகர், இந்து சமுத்திர மாநாட்டின் பக்க நிகழ்வாக மாலைதீவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சர் டாக்டர் எஸ்,ஜெய்சங்கருக்கும் இடையிலான சந்திப்பு உள்ளிட்ட பல சாத்தியமான அபிவிருத்திகளை இந்தியா இலங்கை இடையிலான இருதரப்பு உறவில் அண்மைய காலப்பகுதியில் காணமுடிந்தது. நியூயோர்க்கில் CDRI ஸ்தாபக உறுப்பினராக இலங்கை இணைந்து கொண்டது. இந்தியா மற்றும் அதே போன்ற சிந்தனை உடைய நாடுகளால் அனர்த்த இசைவாக்கத்தினை முன்னேற்றும் நோக்குடன் உருவாக்கப்பட்ட ஒரு கூட்டணியே CDRI (அனர்த்த இசைவாக்க உட்கட்டமைப்பு கூட்டணி).

அபிவிருத்தி பங்குடைமையானது அண்மையில் மேலும் புதிய மட்டங்களை எட்டியது; இந்திய கடன் திட்டத்தில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட இரு ரயில்கள் மூலம் கொழும்பிலிருந்து தென்பகுதியில் இருக்கும் பெலியத்தைக்கும் அதேபோல கொழும்பிலிருந்து வட மத்திய மாகாணத்தின் பொலனறுவைக்கும் இரு புதிய சேவைகள் இணைக்கப்பட்டன. இந்த நிலையில் முற்றுமுழுதாக குளிரூட்டப்பட்ட வசதியுடனான இரு ரயில்களை வழங்குவதற்கான புதிய ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. நாட்டை அதிர்ச்சிக்குள்ளாக்கிய உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் இந்திய சுற்றுலா பயணிகள் பெருமளவில் இலங்கைக்கு வருகைதந்துள்ளனர் எனவும் உயர்ஸ்தானிகர் சுட்டிக்காட்டினார். தனது சொந்த அபிவிருத்தி திட்டங்களில் பயணித்துக்கொண்டிருக்கும் இலங்கையுடன் பங்காளியாவதற்கு இந்தியா தயாராக இருக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

பதவியிலிருந்து விலகும் சங்கத்தின் தலைவர் திரு.ரி.எஸ்.பிரகாஷுக்கு சங்க செயற்பாடுகளை புதிய மட்டத்துக்கு கொண்டுசென்றமைக்காக பாராட்டுக்களை

தெரிவித்த உயர்ஸ்தானிகர் புதிய தலைவர் திரு ரொஹான் துடாவே மற்றும் நிறைவேற்றுக்குழுவை வரவேற்பதாகவும் குறிப்பிட்டார்.

*****************

கொழும்பு

01 ஒக்டோபர் 2019